**தலைப்பு 333 – கொம்ட்ரோல் நாயகத்தின் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொம்ட்ரோல் நாயகத்தின் அலுவலகம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கொம்ட்ரோல் நாயகத்தின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொம்ட்ரோல் நாயகத்தின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ)உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கொம்ட்ரோல் நாயகத்தின் அலுவலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என நான் தெரிவிக்கின்றேன்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

---

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 468,385 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் ஆரம்ப நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி தொடர்பாக ஒதுக்கமொன்றை கட்டியெழுப்பி நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இக்கொள்வனவு மற்றும் ஆரம்ப சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ACA - 6 மாதிரியில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் முறைப்படி கணக்கீடு செய்தல் அவசியமாகும். | 2018 ஆம் ஆண்டில் ஆரம்ப நிலையான சொத்துக்கள் மற்றும் ஆண்டின் போதான கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது தொழில்நுட்ப விடயமொன்று காரணமாக கணக்கீடு செய்யப்பட்ட அப்பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு அரச கணக்குகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கணக்குகளிலிருந்து அகற்றி வழங்கிய உறுதிப்படுத்தலின் பேரில் வருடாந்த இறுதிக் கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுட அரச கணக்குகள் திணைக்களத்தினால் அகற்றப்பட்ட அச்சொத்துக்கள் தற்போது கணக்கு முறைமையில் |

உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

வருமான மதிப்பீட தயாரிப்பது தொடர்பாக கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 26 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க கொம்ட்ரோலர் நாயகத்தின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது வருமான மதப்பீடு மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டிற்காக 2018 யூன் 15 ஆந் திகதிக்கு முனன்ர் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 07 நிறுவனங்களின் தகவல்கள் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக கொம்ட்ரோலர் நாயகத்தினால் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்த வருமான மதிப்பீடுகளில் இத்தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களிடமிருந்து உரிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முறைமையொன்று தயாரித்தல் தேவைப்பாடொன்றாகும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய திகதியில் தகவல்களை சமர்ப்பிக்காத நிறுவனங்களுக்காக தேவையான அறிவூட்டல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன் |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 மூலதன செலவின விடயங்களுக்கும் 09 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு | கொம்ட்ரோல் நாயகத்தின் திணைக்களத்தினால் |

| | | | |
|---|---|---|---|
| | உரிய தேறிய நிதிஏற்பாடுகளில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தன. | நிதிஏற்பாடுகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக நிதி எற்பாடு 2018 சனவரி 01 ஆந் திகதி முதல் புறம்பான தலைப்பொன்றின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இத் திணைக்களத்திற்காக அங்கீகரிககப்பட்ட பதவியணியினர் பூர்த்தி செய்ய முறையான செலவினம் சிக்கனமாகவும் செயற்திறனாவும் தொடர்பிலும் கவனம் செலுத்தியதால் கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்பட்டதாலும் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக |
| (ஆ) | ரூபா 16,700,000 கூட்டுத்தொகையான 04 மூலதன செலவின விடயங்களின் மதிப்பீடு செய்த முழுநிதிஏற்பாடுகளையும் பயன்படுத்தாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அது மூலதன நிதிஏற்பாட்டின் 950 சதவீதமான அதாவது ரூபா 17,120,416 ஆக இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 கடமைகளை நிறைவேற்றப்படாமை

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 இன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனங்களாலும் கொள்வனவு செய்யப்படுகின்ற மற்றும் கைதவிர்க்கப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக தேவையான ஆலோசனைகள் மீளாய்வாண்டின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களிடமிருந்து உரிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முறைமையொன்று தயாரித்தல் தேவைப்பாடொன்றாகும். | அரச நிறுவனமொன்றினுள் நிதியல்லாத சொத்துக்களின் தொடர்பாக தரவு முறைமையொன்றை தாபிப்பதற்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு 2017 இன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டது. பல அரச நிறுவனங்களில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக தரவு முறைமையொன்றோ அல்லது பதிவேடுகள் முறையோ பேணப்படாமையால் நிதியல்லாத |

சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு உரிய அறிவூட்டல் மேற்கொள்ளப்பட்டது.
நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் சொத்துக்கள் தகவல் முறைமை தயாரித்தல்
இலக்கிடப்பட்டிருந்ததடன்
சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஆலோசனைகள் வழங்கப் படாமையால் தரவு முறைமை தயாரிக்கப்பட்டதன் பின்னர் கொள்வனவு மற்றும் கைதவிர்ப்பு தொடர்பான தகவல் நாளதுவரையாக மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கின்றேன்